
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய. மாத இதழ்)



பொன்னி றத்தவர்; நகரத் தார்குரல்
பொலிய வேபணி பலவும் செய்தவர்;
அன்பு நெஞ்சினர்; புன்சிரிப்புடை
அழகு சுந்தரர் நினைவு வாழ்கவே

ஆகஸ்ட் 1992

எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
11-5-1933

மறைவு :
3-8-1984

திரு. S. மணி என்ற
முத்துக்கருப்பன் செட்டியார்

நெஞ்சத்தில் தூய்மையினை வாழச் செய்தாய்
நினைவெல்லாம் நகரத்தார் நலனுக் கென்றாய்
பிஞ்சுமனக் குழந்தையெனச் சிரிப்பாய் உந்தன்
பெயராலும் குணத்தாலும் மணியே ஆனாய்
கொஞ்சுமொழி கேட்காமல் குடும்பத் தோடு
கூட்டாளி நண்பரெல்லாம் குலுங்கச் சென்றாய்
வஞ்சமனக் காலன்உனை அழைத்தான் என்றோ
மலர்ந்த முகம் காட்டாமல் மறைத்துக் கொண்டாய்!

என்றும் நினைவு கூரும் :

M. நாகப்பன் மற்றும் தொழிலாளர்கள்

நாகப்பா சைக்கிள் மார்ட்,
மதுரை, திருவாரூர், கும்பகோணம், சென்னை.

நாகப்பா மோட்டார்ஸ், மதுரை & சென்னை

இந்தியா ஸ்பிரிங்ஸ்

நாகப்பா ஸ்பிரிங்ஸ் பிரைவேட் லிமிடெட்
ராணிப்பேட்டை

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11
ஒலி 7

ஆங்கிரஸ
ஆடி
ஆகஸ்ட்
1992

வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபலவாக்கி அவையவை தோறும்
அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்கு நின்னோரை இல்லாய் நின்கண் வேட்கை எழுவிப்பனே
— நம்மாழ்வார்


ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
20, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009
தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா ரூ. 30-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00



உழைப்பால் உயர்ந்த வங்கி அதிகாரி

திரு. சித. சுப்பையா இந்தியன் வங்கியில் 36 ஆண்டுகள் அனுபவமிக்கவர். 1956ல் இந்தியன் வங்கியில் ஊதியமில்லாத பயிற்சியாளராகச் சேர்ந்த இவர், உதவியாளர், கணக்காளர், ஏஜண்ட், மாவட்ட மேலாளர், கண்காணிப்பாளர், வட்ட மேலாளர், உதவிப் பொது மேலாளர், மண்டல மேலாளர், துணைப் பொது மேலாளர் எனப் படிப் படியாக உயர்ந்து பல பதவிகளில்



இருந்து இன்று பொது மேலாளராக (Domestic Operations) அரும் பணியாற்றி வருகிறார். 1986 ஆம் ஆண்டில் இவர் இந்தியன் வங்கியின் அலுவலர்களுக்கான கல்லூரியில் முதல்வராகவும் பணியாற்றியுள்ளார்.

58 வயதுடைய திரு. சுப்பையா B. Com. பட்டதாரி ஆவார். தேவகோட்டை மேல வீட்டைச் சேர்ந்த திரு. வீர. லெ லெ.சிதம்பரம் செட்டியார் திருமதி சிவகாமி ஆச்சியின் புதல்வரான இவர் நிர்வாகத் திறமை மிக்கவர். வங்கித் துறையின் ஏற்ற இறக்கங்களை நன்கு அறிந்தவர்.

சுவீகாரமும் திருமணமும்

பொது நலத் தொண்டரும் ஸ்ரீ உமையாள் டிரான்ஸ்போர்ட் மேலாளருமான நாட்டரசன் கோட்டை திரு. ராம. உ. உ. கருப்பையா செட்டியாரின் புதல்வன் செல்வன் சிதம்பரம் என்ற சம்பத்தை பொன். புதுப்பட்டி திரு. கா. சித. சிதம்பரம் செட்டியார் 18-6-92 அன்று சுவீகாரம் செய்து கொண்டு காளியப்பன் எனப் பெயரிட்டிருக்கிறார்கள்.

மேற்படி செல்வன் காளியப்பனுக்கும் நெற்குப்பை திரு. செ. மு. பழ. சிங்காரம் செட்டியார் புதல்வி செல்வி கீதா என்ற வள்ளியம்மைக்கும் 21—6—92 அன்று நெற்குப்பையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஆடிவெள்ளி ஊஞ்சல் உற்சவம்

தேவகோட்டை ஸ்ரீ ரெங்கநாதப் பெருமாள் கோவிலில் ஆடிவெள்ளி ஊஞ்சல் உற்சவம் 17-7-92 மாலை சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அப்பொழுது நிகழ்ந்த ஆன்மீகப் பேரவையில் காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் மகாபாரதம் பற்றி உரையாற்றினார். கோவில் நிர்வாக அறங்காவலர் திரு. ரெங்கநாதன் செட்டியார் வரவேற்றார். திரு. சதீஷ் நன்றி கூறினார்.

லெ. அழகு சுந்தரம் செட்டியார்

திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் கண்டரமாணிக்கத்தில் பிரபலமான செ. சி. நா. குடும்பத்தில் லெட்சுமணன் செட்டியார் அவர்களின் மூத்த புதல்வராக 16-7-1907ல் பிறந்தார்கள். பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த இவர்கள் இலங்கையில் கல்லூரிக் கல்வி வரை பயின்று Solicitor பட்டம் பெற்று அங்கு 1942 வரை Solicitor ஆகத் தொழில் செய்து



1971ல் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மாநாடு மதுரையில் நடைபெற்றபோது அதன் வரவேற்புக் குழுப் பொருளாளராக இருந்த திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் டி. வி. எஸ். விருந்தினர் மாளிகையில் இந்தியத் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேருவுடன் கைகுலுக்கும் காட்சி அருகே திருவாளர்கள் தி. மாணிக்கவாசகம் செட்டியார், ஓ. வி. அளகேசன், டி. எஸ். கிருஷ்ணா ஆகியோர்.

வந்தார்கள்.

இவர்கள் மதுரை பசுமலை மகாலெட்சுமி நூற்பாலையின் நிர்வாக இயக்குநராக 45 ஆண்டுகள் இருந்து அதை நிர்வகித்து வந்தார்கள். மதுரை நகரத்தார் சங்கத்தின் தலைவராக பலஆண்டுகள் இருந்து, சங்கத்தின் வளர்ச்சிக்கும் நகரத்தாரின் முன்னேற்றத்திற்கும் அரும்பாடு பட்டார்கள். மதுரை தமிழிசைச் சங்கத்தின் தலைவராக இருந்து அரும் பணியாற்றினார்கள். நமது "நகரத்தார் குரல்" இதழின் கௌரவ ஆசிரியராக இருந்து அவ்வப் போது நல்ல பல ஆலோசனைகளை வழங்கி வந்ததோடு அதன் வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் காட்டினார்கள்.

1981ல் காரைக்குடியில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரத்தார் நல உரிமை மாநாட்டின் தலைவராக இருந்து தம் வயதையும் பாராமல் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று வந்து அம்மாநாடு வெற்றி பெற பெரிதும் உழைத்தார்கள்.

உதவிகேட்டு வந்தவர்களுக்கு இன்முகத்தோடு தேவையானவற்றைச் செய்து உதவியவர்கள். வயது பாராமல், தகுதி பாராமல் பழகும் குழந்தை உள்ளம் கொண்டவர்கள். சிறியோரையும் மதிக்கும் பண்பாளர்.

மனித நேயத்திற்கு எடுத்துக் காட்டான இவர்கள் 20-9-1987 அன்று நம்மை விட்டுப் பிரிந்தார்கள்.

நம் இதழின் கௌரவ ஆசிரியரான அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இக்கட்டுரை வெளியிடப் பெற்றுள்ளது.

பரங்குன்றத்துக்குப் பால் குடங்களும் காவடிகளும்

மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் பத்தாவது ஆண்டாக வருகிற ஆவணி மீ 5௳ (21-8-92) வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கு மதுரை வடக்குமாசி வீதி, 397 நிர் கட்டிடத்தில் அமைந்துள்ள தருமபுரம் ஆதீன மடத்திலிருந்து பால்குடங்களும், காவடிகளும் எடுத்துச் சென்று 10-00 மணியளவில் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்குச் செலுத்தப் பெறுமென்றும் அதனை ஒட்டி நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் நகரத்தார் பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறும் மதுரை நகரத்தார் சங்கத்தின் செயலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நிகழ்ச்சி விவரம்:

ஆவணி மீ 4௳ (20-8-92) வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு தேநீர்-காவடி கட்டுதல்-தொடர்ந்து பக்திப் பாடல்கள் பாடுதல்.

இரவு 8-00 மணிக்கு வேல் அபிஷேகம் - தீபாராதனை.

ஆவணி மீ 5௳ (21-8-92) வெள்ளிக்கிழமை காலை 5-30 மணிக்குப் பால் குடங்கள் கட்டுதல்.

காலை 7-00 மணிக்குப் பால் குடங்கள், காவடிகளுடன் திருப்பரங்குன்றத்திற்குப் பக்தர்கள் புறப்படுதல்.

காலை 10.00 மணிக்குக் காவடிகள்: பால் குடங்கள் செலுத்துதல். பகல் 12-00 மணிக்குத் திருப்பரங்குன்றம் நகரவிடுதியில் மஹேஸ்வர பூஜை.

"நகரத்தார் குரல்" ஆலோசனைக் குழுக் கூட்டம்

"நகரத்தார் குரல்" இதழின் ஆலோசனைக் குழுக் கூட்டம் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் இல்லத்தில் அவர்கள் தலைமையில் 9–7–92 அன்று இரவு நடைபெற்றது.

அப்போது "நகரத்தார் குரல்" இதழுக்கு திரு வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தொடர்ந்து ஆசிரியராக இருக்க, கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப் பெற்றது.

"நகரத்தார் குர" லின் நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வரவும் கணக்கு - வரவு செலவு களைத் தணிக்கை செய்யவும் இரசிகமணி' திரு. இராம. சிதம்பரம் செட்டியார் அவர்களை நியமனம் செய்து தீர்மானம் நிறை வேற்றப் பெற்றது.

ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் 32 பேர் இருப்பதை 51 பேராக உயர்த்தவும் ஆண்டு விழாவை பிப்ரவரி '93 அல்லது மார்ச் 93 வாகில்கொண்டாடுவது என்றும் மற்றும் சில தீர்மானங் களும் நிறை வேற்றப் பெற்றன.

கூட்டத்தில் ஏராளமான ஆலோசனைக் குழு உறுப்பினர் களும் நண்பர்களும் கலந்து கொண்டனர்.

ஃ பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழாவையொட்டி காவிரிப்பூம்பட்டினத்தில் 7-8-92 வெள்ளிக்கிழமை மாலை 6-00 மணிக்கு ஒன்பது நகரக் கோவில் களைச் சேர்ந்த ஆச்சிமார்கள் பங்கு பெறும் திருவிளக்குப் பூஜை நடைபெற உள்ளது.

பட்டினத்தடிகள் திருவிழா: பேரவை நிகழ்ச்சி

காவிரிப்பூம்பட்டினம் ஸ்ரீ பட்டினத் தடிகள் அற்புதத் திருவிழாவின் பேரவை நிகழ்ச்சிகள் 8-8-92 முதல் 10-8-92 வரை நடைபெற உள்ளன.

பேரவை நிகழ்ச்சியை 'பதிப்புச் செம்மல்' முனைவர் திரு. ச. மெய்யப்பன் 8-8-92 சனி காலை 10-30 மணிக்குத் தொடங்கி வைக்கிறார். 11-00 மணிக்கு 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. 'சிறுத் தொண்டர் சரித்திரம்' எனும் பொருளில் உரையாற்றுகிறார். பகல் 12-00 மணிக்கு புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் 'ஞானம் பிறந்த கதை' என்ற தலைப்பில் உரையாற்றுகிறார்.

9-8-92 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு 'கண்ணதாசன் புகழ்க் காவலர்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் உரையாற்றுகிறார்கள். மாலை 5-00 மணிக்கு திரு. வி. என். சிடி. தலைமையில் டாக்டர் நவநீத கிருஷ்ணன் டாக்டர் திருமதி விஜயலெட்சுமி நவநீதகிருஷ்ணன் இருவரும் 'கிராமியப் பாடல்கள்' எனும் தலைப்பில் பேசுவதோடு சில கிராமியப் பாடல்களை பாடவும் உள்ளனர்.

10-8-92 திங்கள் காலை 10-00 மணிக்கு 'உணவே மருந்து; மருந்தே உணவு' என்ற தலைப்பில் திரு. சித. சிதம்பரம் செட்டியார் உரையாற்ற 10-30 மணிக்கு கவிஞர் திரு. சித. சிதம்பரம் கவிமாலை படைக்கிறார் காலை 11-00 மணிக்கு 'பட்டினத்தார் தந்த பரிசு' என்ற தலைப்பில் புலவர் திரு. வே. வேலப்பன் உரையாற்றுகிறார்.

11-8-92 செவ்வாய் காலை 11-00 மணிக்கு கோவிலூர் ஆதீனம் தவத்திரு காசி விஸ்வநாத ஞான தேசிக சுவாமிகளுக்குப் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப் பெறுகிறது.

மாயவரத்தில் சிறப்புக் கூட்டம்

மாயவரம் நகரத்தார் சங்கத்தின் சார்பில் 28-6-92 மாலை அ. நா. சத்திரத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது மாயவரம் நகரத்தார் சங்கத் தலைவர் தலைமை தாங்கினர். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் '' நகரத்தார் திருப்பணிகள் '' பற்றி சிறப்புரையாற்றினர். அவ்வமயம் அங்கு எழுந்தருளிய தேவகோட்டை - வைத்தீஸ்வரன் கோவில் வேல் - காவடிக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பெற்றது. மாயவரம் வட்ட நகரத்தார்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

59-ஆம் ஆண்டு நிறைவு விழா

பொது நலத் தொண்டரும் ஐயப்ப குருசாமியுமான நாட்டரசன்கோட்டை திரு ராம. உ. உ. கருப்பையா செட்டியார் — திருமதி நித்யகல்யாணி ஆச்சியின் 59-ஆம் ஆண்டு நிறைவு விழா 24-6-92 அன்று நாட்டரசன் கோட்டை சிவன்கோவிலில் சிறப்பாக நடைபெற்றது. நகரத்தார் பெருமக்களும் நண்பர்களும் தொழிலாளர்களும் கலந்து கொண்டு வாழ்த்தினர்.



எனது ஆலய அனுபவங்கள்

-பி.என். சிதம்பரம்

— 14 —

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் திருமலை நாயக்க மன்னர். கி. பி. 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட பெருமை இம்மன்னருக்கு உரியது. இம்மன்னர் திருச்சிராப்பள்ளியையே தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். இவர் 1634-இல் திருச்சிராப்பள்ளியிலிருந்து தம் தலைநகரை மதுரைக்கு மாற்றினார்.

தலைநகரை இவர் மாற்றியதற்குச் சொக்கநாதப் பெருமானின் அருளே காரணம். ஆண்டு தோறும் மன்னர் திருமலை, திருச்சியிலிருந்து மதுரைக்கு வந்து கோவில் விழாக்களில் கலந்து கொள்வது வழக்கம். அவ்வழக்கப்படி 1634-ஆம் ஆண்டில் மதுரையில் நடைபெறும் ஒரு திருவிழாவைக் காணத் திருச்சியிலிருந்து புறப்பட்டார். நெடுநாட்களாகவே மன்னர் மண்டைச் சளி நோயால் துன்புற்று வந்தார்

மதுரைக்கு வரும் வழியில் திண்டுக்கல்லில் மன்னருக்கு நோய் மிகுதியாயிற்று. அத்துன்பத்தை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. மதுரைக்குச் செல்லும் எண்ணத்தைக் கைவிடக் கருதினார். அன்றிரவே சொக்கலிங்கப் பெருமான் ஒரு சித்தர் உருவில் மன்னர் கனவில்

தோன்றி, "நீ தலைநகரைத் திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றி அன்னை அங்கயற்கண்ணியையும் சொக்கநாதரையும் வழிபட்டு அரசாட்சி நடத்தினால் உன் நோய் தீரும்" என்று திருவாய் மலர்ந்தருளி திருநீற்றைக் கொடுத்து மறைந்தார். கனவு கண்ட திருமலை மன்னர், விழித்து எழுந்து கரத்தில் திருநீறு இருப்பதை உணர்ந்து பார்த்து வியந்தார்.

பொழுது விடிந்தது. மன்னர் தம்மிடம் வந்தவர்களிடம் தாம் கனவில் கண்ட காட்சிகளைக் கூறினார்.

தம் நோய் நீங்குமானால் தாம் நிலையாகவே மதுரையில் தங்கி ஆட்சிசெய்வதாகவும் ஐந்து இலட்சம் பொன் செலவில் திருப்பணியும் திருஆபரணங்களும் செய்வதாகவும் திருவருளை வேண்டி உறுதி எடுத்துக் கொண்டார். பின்னர் அவர் பல்தேய்த்து முகம் கழுவி மூக்கைச் சிந்திய போது, அவர் உடலில் இருந்த சளி முழுவதும் விழுந்தது. நோயும் அன்றோடு தீர்ந்தது.

மதுரையை அடைந்த மன்னர் திண்டுக்கல்லில் வேண்டிக் கொண்டவாறு கோவிலாட்சியை அபிஷேகப் பண்டாரம் என்பவரிடமிருந்து திரும்பப் பெற்றுத் தாமே திருப்பணியைச் செய்து முடித்தார். நாட்டு வருமானத்தில் ஒரு இலட்சம் பொன்னுக்கு ஒரு விழுக்காடு இறைவழிபாட்டுக்கும் 40 விழுக்காடு விழாக்களுக்கும் செலவிட அறக்கட்டளைகள் ஏற்படுத்தினார். தம் ஆலயத் திருப்பணிகள் திருமலை மன்னர் வாயிலாக நடைபெற விரும்பிய இறைவன் இத்திருவிளையாடலை நிகழ்த்தியுள்ளார்.

(வளரும்)

---


60 ஆண்டுகளுக்கு முன் .....

தங்கம், வெள்ளியின் சென்னை விலை

சவரன் 1-க்கு (மொத்த விலை)	ரூ. 18. 9. 0.
சவரன் 1-க்கு (சில்லறை விலை)	ரூ. 18. 9. 6.
சன்ட் தங்கம் தோலா 1-க்கு	ரூ. 29. 5. 0.
மூசைத் தங்கம் தோலா 1-க்கு	ரூ. 29. 0. 0.
சீமைக் கட்டி தோலா 100-க்கு	ரூ. 56. 0. 0.
வெள்ளி (சில்லறை) தோலா 1-க்கு	ரூ. 0. 9. 6.

(சொ. முருகப்பா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 11-8-32 தேதியிட்ட "குமரன்" வார இதழிலிருந்து)

தகவல்: பலவான்குடி, கும. வள்ளியப்பன்



திருமணம்

மதுரை நகரத்தார் சங்கத்தின் மேலாளர் தேவகோட்டை திரு. அண. மெய்யப்ப செட்டியாரின் புதல்வி செல்வி சித்ராவிற்கும் தேவகோட்டை திரு. தொ. பெரி லெ. விஸ்வநாதன் செட்டியாரின் புதல்வன் செல்வன் செந்தில் நாதனுக்கும் 18-6-92 அன்று தேவகோட்டை மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி திருமணத்தில் மதுரை நகரத்தார் சங்கத்தலைவர் திரு. லெ. நாராயணன் செட்டியார், செயலாளர்கள் திரு சொ. சொ. மீ, சுந்தரம் திரு எம்.சி என். மாணிக்கம் செம்பனூர் திரு. குமநா. சுப. நா இராமசாமிச் செட்டியார் திரு. ஆர். சுப்பிரமணியன் செட்டியார் சிங்கப்பூர் நேஷனல் பல்கலைக் கழகப்பேராசிரியர் முனைவர் திரு ஆர். கருணாநிதி கிள்ளான் திரு. ஆர். லெட்சுமணன் மற்றும் நகரத்தார் பெருமக்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

முனைவர் திரு. சுப. அண்ணாமலை தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. திரு. ஆர். எம். எம். அண்ணாமலை செட்டியார், 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ., பேராசிரியர் திரு. ந. சீனிவாசன், திரு. துரை எழில்விழியன் கவிஞர் திரு. சிவல்புரிசிங்காரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நகரத்தார் சுயநிதிப் பல்கலைக் கழகம்
அமைப்போம் வாரீர்!
வரதட்சணை எனும் வேண்டாத பழக்கம்
இனி வேண்டாம், நம் சமூகத்தில்!

ரோஜா முத்தையா

சில அலுவல்கள் காரண மாக சென்னையிலிருந்து ஒரு முறை திரு. ரோஜா முத்தையா தம் சொந்த ஊரான கோட்டை யூருக்கு வர நேர்ந்தது. அப்போது தாம் சேகரித்து வைத்திருந்த சில பழைய புத்தகங்களை தம் நண்பர் ஒருவரிடம் கொடுத்து ''இதை வைத்திருங்கள். நான் ஊரிலிருந்து வந்ததும் பெற்றுக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு வந்தார். பின் சென்னை திரும்பி அந்த நண்பரிடம் கேட்க அவர் ''நூல்கள் அனைத்தும் திருடு போய் விட்டன'' என்ற செய்தியைச் சொன்னார். திரு. ரோஜா முத்தையாவுக்கோ அது மிகுந்த அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளித்தது.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் விடாமுயற்சியுடன் நூல்கள் சேகரிப்பதை தன் இலட்சியமாகக் கொண்டு அயராது செயலாற்றினார். அப்படி உருவானதுதான் கோட்டையூரில் உள்ள 'லைப்ரரி சர்வீஸ் இந்தியா' நூலகம்.

''ஆனந்த விகடன்'' பொன் விழா ஆண்டுக்கு அதன் முதன் இதழ் தேவைப்பட்டது. அது எங்கு தேடியும் எவரிடம் கேட்டும் கிடைக்கவில்லை. அதனை திரு. ரோஜா முத்தையா தம் நூலகத்திலிருந்து கொடுத்து உதவினார்.

— ஆர் எம். வி. இராமசாமி
திருச்சி

பள்ளத்தூர் சிவன் கோவில் திருவிழா

பள்ளத்தூர் சிவன்கோவிலில் திருவிழாவை முன்னிட்டு 4-7-92 மாலை 'சூரபன்மன் அழிவுக்குக் காரணம் சூரபன்மனே' என்ற தலைப்பில் வழக்காடுமன்றம் நடைபெற்றது. காசிஸ்ரீ திரு. அரு. சோ. தலைமை தாங்கினார். முனைவர் திரு. சபா. அருணாசலமும் முனைவர் திரு. கரு. முத்தையாவும் வாதாடினர். திரு. சி. இராமசாமி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்.

திருமணம்



திருமுறைக் காவலர், மதுரை ஸ்ரீ மங்கையர்க்கரசி மில்ஸ் பி. லிட். டின் தலைவர் திரு. இராம. முத்துப்பழநியப்ப செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. மு. கண்ணப்ப செட்டியாரின் புதல்வியுமான செல்வி மங்கையர்க்கரசி B. A. க்கும் பட்டமங்கலம் திரு. சுப. கரும்புநாதன் செட்டியார் புதல்வன் செல்வன் ரெங்கநாதன் B.E. (M S) U.S.A.க்கும் 2-7-92 அன்று பாகனேரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தையொட்டி டாக்டர் திரு. எஸ். சண்முகம் செட்டியார் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. அப்போது ஓய்வு பெற்ற நீதிபதி திரு. எம். ஏ. முருகேசன், பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் திருமதி உமையாள் முத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திரு. என். எஸ். சுந்தரராமன் நிகழ்ச்சியை அமைத்து உதவினர்.

திருமணத்திற்கு செட்டிநாடு குடும்பத்தைச் சேர்ந்த குமாரராணி திருமதி மீனா முத்தையா திருமதி சிகப்பி இராமசாமி, திரு. ஏ ஆர். இராமசாமி தொழிலதிபர் திரு. லெ. நா. திரு. அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார் குமார வேலூர் திரு. என். தியாகராசன் மற்றும் தொழிலதிபர்கள் ஆலை அதிபர்கள், நூல் வணிகர்கள் கணக்காய்வாளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், அதிகாரிகள், நண்பர்கள் பெருமளவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

உங்கள் குரல்

''உங்கள் குரல்'' பகுதி இல்லாத ஜூலை' 92 இதழ் சர்க்கரை இல்லாத பாயாசம் போல இருந்தது.

ஆர்எம். வி. இராமசாமி
திருச்சி

'பதிப்புச் செம்மல்' டாக்டர் ச. மெய்யப்பன் அவர்களுக்கு ஆசிரியர் வி. என் சிடி. அவர்கள் எழுதிய கடிதம் சிறப்பாக இருந்தது. பாராட்டுக்கள்.

ஏஎன். சிதம்பரம்
விரையாச்சிலை.

ஜூன்' 92 இதழில் காரைக்குடியிலும் நகர விடுதி இருக்கிறது என்ற செய்தியினை வெளியிட்டு பலரது சந்தேகத்தைத் தீர்த்துவைத்த ''குர'' லுக்கு நன்றி.

இராம. அலமேலு
கோட்டையூர்

ஜூலை' 92 '' நகரத்தார் குரல்'' இதழ் கண்டேன். களிப்பு மிகக் கொண்டேன். இதழில் பல்வகை மணமலர்கள் தொகுக்கப் பெற்றிருந்தன.

மொட்டைக் கோபுரத்தை முழுக்கோபுரமாக்கிய வயிநாகரம் வெங்கடாசல அய்யாவின் ஈரத்தையும் நெஞ்சின் தீரத்தையும் ஆற்றொழுக்கான நடையில் அற்புதப் படமாகத் தீட்டியிருந்தார் திரு. வி. என். சிடி. அவர்கள்.

திரு. தமிழநவி மணியனின் ''கண்ணதாசன் கவிதைகள் ஒரு கண்ணோட்டம்'' ஒலிப்பேழை வெளியீட்டு விழாவின் நான்கைந்து மணிநேர நிகழ்ச்சியை இரண்டரைப் பக்கங்களில் சுருக்கித் தேனென, பாகென, தீங்கனிச் சாறென அளித்திருந்தீர்கள். நிகழ்ச்சியை நேரில் கண்டு சுவைத்த நிறைவு கிட்டியது.

தாலாட்டுப் பாடலின் பல வரிகள் உருகவைத்தன. 'சிதம்பர இரகசியம்' தத்துவ விளக்க உரை சிந்தைக்கு விருந்து.

கு. ஞானசம்பந்தன்
மதுரை

கோவிலூர் சுவாமிகளின் ஆசியுரை நல்ல சிந்தனை வளம் மிக்க கட்டுரையாகும். அதனை தொடர்ந்து அதுவும் முதல் கட்டுரையாக வெளியிட்டு வருவது சிறப்பாகும். செய்திகளை, பயனுள்ள கட்டுரைகளை உடனுக்குடன் பொறுத்தமான படங்களுடன் வெளியிட்டு வருவதில் ''நகரத்தார் குரல்'' சிறந்து விளங்குகிறது.

ஆர் எம். கண்ணப்பன்
மதுரை

செய்திகளை, கட்டுரைகளை நல்ல தமிழில் விரிவாக வெளியிட்டு வரும் ''நகரத்தார் குர'' லுக்குப் பாராட்டுக்கள் 'செய்திகள் வாசிப்பவர்..' பகுதியில் பல நல்ல செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது தாலாட்டுப் பகுதி மிக மிக அவசியமான அருமையான பகுதியாகும்.

வி ஆர். இராமநாதன்
சென்னை

ஃ ஆத்தங்குடி நகரச் சிவன் கோவிலின் திருக்குடநன்னீராட்டு விழா ஆங்கிரஸ ஸு ஆவணி மீ 17௳ (2-9-92) நடைபெற உள்ளது.

வேந்தன்பட்டி மு. பழநியப்பன்

வேந்தன்பட்டியைச் சேர்ந்த திரு. மு. பழநியப்பன் மதுரை சதாசிவநகரில் 'முத்துராஜா இண்டஸ்ட்ரீஸ்' என்கிற நிறுவனத்தை 1987ல் தொடங்கி, சிறப்பாக நடத்தி வருகிருர்.



இங்கு டி. வி. ஆண்டனு, வெட் கிரைண்டர், வாஷிங் மெஷின் ஆகியவை தயாரிக்கப் பெறுகின்றன. இவை அரசுக்குச் சொந்தமான சென்ட்ரல் எலெக்ட்ரிகல் டெஸ்டிங் லேபரட்டரியில் பரிசோதனை செய்யப்பட்டு நற்சான்றிதழ் பெற்றுள்ளன.

திரு. பழநியப்பன் வணிகவியல் பட்டதாரி ஆவார். கோவை ஜி.டி. நாயுடு தொழில் கூடத்தில் எலெக்ட்ரானிக்ஸ் கல்வி பயின்றுள்ளார்.

இவர், திரு. பழ. முத்துச் செட்டியாரின் புதல்வரும் கொப்பனுபட்டி திரு. சுப. அண்ணுமலைச் செட்டியாரின் மாப்பிள்ளையுமாவார்.

திரு. பழநியப்பன் மதுரை மத்திய அரிமா சங்கத்தில் 83–84ல் உதவிச் செயலாளராகவும் 85–86ல் செயலாளராகவும் தொண்டாற்றி பரிசுகள் பெற்றுள்ளார். தற்போது அதில் செயற்குழ உறுப்பினர்.

மதுரை மாவட்டச் சிறுதொழில் அதிபர்கள் சங்கத்திலும் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்திலும் உறுப்பினராக இருந்து வருகிருர்.

ஒக்கூர் ஸ்ரீ சசிவர்ண விநாயகர் கோவில் கூட்டம்

ஒக்கூர் நகரத்தார்கள் கூட்டம் ஒக்கூர் ஸ்ரீ சசிவர்ண விநாயகர் கோவிலின் திருப்பணிக் குழுத் தலைவர் திரு. சிக. அரு. க. அரு. சோம. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் 19-7-92 ஞாயிறன்று காலையில் மதுரை தெற்குமாசி வீதியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் நடைபெற்றது.

அப்போது -

மேற்படி கோவிலுக்குத் திருப்பணி செய்ய ஸ்தபதியைக் கலந்து கொண்டு, புதிதாக வரைபடம் போட்டு கூடிய விரைவில் தச்சு செய்வதென்றும் திருப்பணிக்கு வசூலாகும் நன்கொடைகளை மதுரையில் ஏதாவது ஒரு வங்கியில் கணக்குத் திறந்து வரவு-செலவு செய்து வருவது என்றும் கோவில் தொடர்பான புள்ளிவரி பாக்கி, படித்தர நிதி, திருப்பணிக்கான நன்கொடை ஆகியவற்றை வசூல் செய்ய எட்டுப் பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள், மலர்க் குழுவினர் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



வெள்ளிக் கட்டில் கட்டி . . .

சித. நா. லெ. சுப. நாச்சம்மை, காரைக்குடி

ஆராரோ ஆரிரரோ ஆரிரரோ ஆராரோ
வெள்ளிக் கட்டில் கட்டி வெண் ணிலவம் பஞ்செடுத்து
துள்ளி வரும் எம் மகனே நீ துயில மஞ்ச மிட்டேன்
திங்கள் உதிச் சிருச்சு திசை யெங்கும் ஒளிச்சிருச்சு
எங்கள் குல மகனே எழிலரசே நீ யுறங்கு !
பொன்னில் வளையலிட்டு பொற் காலில் கொலுசுமிட்டு
விண்ணின் மதி யெடுத்து விளையாட நான் தருவேன்
காதில் கம்மலு மாய் கைவிரல்கள் மோதிரமாய்
ராசாவே நான் தருவேன் ராத்திரியில் நீ உறங்கு !
வெள்ளி உதிக்கும் வரை வேறு உனக்கு வேலை யென்ன?
சொல்லி அழு மகனே தேம்பி அழக் காரணமென்ன?
தந்தை அடித்தாரோ? தமையன் உன்னை வைதானோ?
சென்று நான் கேட்பேன் என் செல்வமே நீ யுறங்கு
கண்ணே நீ அழுதால் கண்ணி ரண்டும் கங்கை நதி
பொன்னே நீ அழுதால் பூமி யெங்கும் பொன்னி நதி
என்ன தவறு செய்தேன் ஏனிந்த அழுகையடா
அன்னையிடம் சொல்லி விட்டு அமைதியுடன் நீ உறங்கு !
தென்றல் காற்று வீச தெய்வம் வந்து பாட்டுரைக்க
மன்றம் தனில் பிறந்த மன்னவனே என் மகனே
கன்று கதறயிலே தாய்ப் பசுவும் தூங்கிடுமோ

பெருமைக்குரிய ஆச்சிமார்களே ! உங்களுக்குத் தெரிந்த தாலாட்டுப் பாடல்களை தாலாட்டுப் பகுதி, ''நகரத்தார் குரல்'', மதுரை - 625 009 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அது பலருக்கும் உதவட்டும்.

இன்று நீ உறங்கு இரவுப் பொழு தழிய
தத்தி நீ நடந்தால் தரணியெங்கும் பொன் விளையும்
தவழ்ந்து நீ நடந்தால் வையகமே சரணடையும்
தேம்பி நீ அழுதால் என் மனதில் வேல் பாயும்
காம்பு விழி மூடி கண்ணயர்ந்து நீ யுறங்கு !

திருக்களர் ஸ்ரீ ஆண்டவரின் குருபூசை

கோவிலூர் ஆதீனத்தைச் சேர்ந்த திருக்களர் ஸ்ரீ ஆண்டவரின் 81ஆம் குருபூசை 12-6-92 அன்று சிறப்பாக நடைபெற்றது. (கோவிலூர் ஆதீனத்தின் ஐந்தாம் பட்டமாக இருந்து அருளாட்சி செய்த ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் திருக்களரில் எழுந்தருளி சுமார் 30 இலட்ச ரூபாய் செலவில் பாடல் பெற்ற ஸ்ரீ பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோவிலைப் புதுப்பித்துக் குடநீராட்டுச் செய்தார்கள். 1911 ஆம் ஆண்டில் வைகாசி விசாகத்தன்று திருத்தேர் நிகழ்ந்த பொழுது வணங்கியவாறு அவர்கள் முக்திபெற்றார்கள்) அன்று நிகழ்ந்த ஆன்மீகப் பேரவைக்குக் கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞானதேசிக சுவாமிகள் தலைமை தாங்கினார்கள். திரு. ஏ. முத்தையா செட்டியார் வரவேற்றார். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் ''மகாபாரதம் விராடபருவம்'' பற்றிப் பேருரை ஆற்றினார். திருக்களர் மானேஜர் திரு. சுப்பையா நன்றி கூறினார். திருக்கோவிலில் அம்பாளுக்கு சொர்ண அங்கி சாத்தி வழிபாடு செய்யப்பெற்றது. திருக்களர் ஆண்டவர் வெள்ளி கேடகத்தில் எழுந்தருளி காட்சியளித்தார்.

அரிமா சங்கத் தலைவர்

காரைக்குடி அரிமா சங்கத்தின் புதிய தலைவராக திரு. லேனா கணேசன் செட்டியார் 5—7—92 அன்று பதவி ஏற்றார்.

அரிமா சேவையில் கணவனும் மனைவியும்

கண்டரமாணிக்கம் மு. சின்னநாச்சியப்ப செட்டியார் அவர்களின் மூத்த புதல்வர் அரிமா திரு. சி நா. நாச்சியப்பா 1992-93 ஆம் ஆண்டிற்கு மதுரை மத்திய அரிமா சங்கத்தின் தலைவராக 3-7-92 அன்று பதவியேற்றுள்ளார். அவருக்கும் அவரைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கும் மதுரை கே. கே. நகர் செல்லம் பாப்புசாமி ஹாலில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் முன்னாள் 324 B அரிமா மாவட்ட ஆளுநர் அரிமா திரு. ஏ. எஸ். சுப்பையன் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்கள்.

அரிமா திரு. சி நா. நாச்சியப்பா 54 வயதுடையவர். பள்ளிக் கல்வியை ஸ்ரீலங்காவிலும் கல்லூரிக் கல்வியை திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியிலும் கற்றவர். B.Com. பட்டதாரி. இவர் 1948 முதல் 1983 வரை ஸ்ரீலங்காவில் இருந்தவர். தெய்வ வழிபாட்டிலும் பொதுத் தொண்டிலும் ஆர்வமிக்கவர். ஆண்டுதோறும் தைப்பூசத்திற்கு பழனிக்குப் பாதயாத்திரையாகச் சென்று வருகிறார். இவர் மதுரையில் நூல் வணிகமும் லேவாதேவித் தொழிலும் செய்து வருகிறார்.





இவர் 85-86ல் மதுரை மத்திய அரிமா சங்கத்தில் உறுப்பினராகி 86-87ல் பொருளாளராகவும் 87-88ல் செயலாளராகவும் தொண்டாற்றி சிறந்த செயலாளருக்கான விருதையும் பெற்றுள்ளார். 88-89, 89-90, 91-92 ஆம் ஆண்டுகளில் மாவட்டத் தலைவராகத் தொண்டாற்றியுள்ளார்.

இவர் மதுரை நகரத்தார் சங்கம், பக்தி நெறி மன்றம் சேம்பர் ஆஃப் காமர்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் போன்றவற்றில் ஆயுள் உறுப்பினராக உள்ளார். மதுரை சோஷியல் ரெக்ரியேஷன் கிளப்பின் செயலாளர்.

இவரது துணைவியாரும் ஒக்கூர் சிக. கரு. கண. இராமநாதன் செட்டியார் அவர்களின் புதல்வியுமான திருமதி சரோஜா நாச்சியப்பன் 1992-93 ஆம் ஆண்டிற்கு மதுரை மத்திய அரிமா மகளிர் சங்கத்தின் தலைவியாக 3-7-92 அன்று நடைபெற்ற விழாவில்


பொறுப்பேற்றுள்ளார்.

இவர்களுக்கு மூன்று புதல்வர்களும் ஒரு பெண்ணும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

அரிமாப் பணியில் பல சேவைத் திட்டங்களை நிறைவேற்ற ஆர்வம் கொண்டு செயலாற்றிவரும் அரிமா திரு. சி நா. நாச்சியப்பாவுக்கும் திருமதி சரோஜா நாச்சியப்பாவுக்கும் நமது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோவிலூரில் சிந்தனைப் பூங்கா

கோவிலூர் ஆதீனத்தில் சிந்தனைப் பூங்காவின் 10 ஆவது நிகழ்ச்சி 11 7-92 காலை சிறப்பாக நிகழ்ந்தது. கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு காசி விஸ்வநாத ஞானதேசிக சுவாமிகள் தலைமை தாங்கினார்கள். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார். பேராசிரியை முனைவர் சரஸ்வதி இராமநாதன் "குருவருள்" பற்றி சிந்தனை உரை நிகழ்த்தினார். அன்று கோவிலூர் ஆதீனத்தின் 9ஆவது மடாதிபதி இராமநாத சுவாமிகளின் குருபூஜையும் நடைபெற்றது.




மணமகன்: ரெங்கநாதன் B. E. (M. S.) U. S A. மணமகள்: மங்கையர்க்கரசி B. A. இவர்கள் திருமணம் 2–7–92 அன்று பாகனேரியில் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுடன் மணமகளின் தந்தை திரு. எம். கண்ணப்பனும் தொழிலதிபர் திரு. லெ. நாராயணன் செட்டியாரும்.

தமிழ் மணம் பரப்பும் திருநாவுக்கரசு

— வி. என். சிதம்பரம் —

திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்கள் தமது வானதி பதிப்பகத்தின் மூலம் நான்காயிரம் நூல்களை வெளியிட்டுள்ளதைப் பாராட்டும் வகையில் குன்றக்குடி ஆதீனத்தில் அண்மையில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தமது பாராட்டுரையில் ''திருநாவுக்கரசு பதிப்புக் கால அரசர் மட்டுமல்ல; பண்பிலும் அரசர்; நல்ல பண்புகளுக்கு இலக்கணமாக விளங்குகிறார்'' என்று குறிப்பிட்டு மனதாரப் பாராட்டியதுடன் அவருக்குத் தங்கப் பதக்கம் அணிவித்துப் பொன்னாடையும் போர்த்தினர்.

பொதுவாக திருமடங்களுக்கு பக்தர்கள்தான் பொன்னும் பொருளும் வழங்குவது வழக்கம். அதற்கு மாறாக திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு குன்றக்குடி ஆதீனத்திலிருந்து தங்கப் பதக்கம் அளித்திருக்கிறார்கள். அவர் தமிழுக்குச் செய்துள்ள தொண்டுக்குக் கிடைத்துள்ள பரிசு அது. இதேபோல் முன்பு ஒரு முறை காஞ்சிப் பெரியவர் தவத்திரு பரமாச்சாரிய சுவாமிகள் ''அர்த்தமுள்ள இந்து மதம்'' நூலைப் படைத்தற்காக கவியரசர் கண்ணதாசனுக்கு ஒரு தங்க மோதிரமும் அந்த நூலை வெளியிட்டதற்காக திருநாவுக்கரசு அவர்களுக்கு ஒரு தங்க மோதி



குன்றக்குடியில் நிகழ்ந்த பாராட்டு விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன் திரு. ஏ. திருநாவுக்கரசு — திருமதி காளியம்மை திருநாவுக்கரசு.

ரமும் பரிசளித்துப் பெருமைப் படுத்தினார்கள்.

திருநாவுக்கரசு அவர்கள் பர்மாவில் பெரும் சொத்துக்கு அதிபதியாக இருந்து இரண்டாவது உலக மகாயுத்தத்தில் எல்லாவற்றையும் இழந்து கால் நடையாக பர்மாவிலிருந்து தமிழகத்திற்கு வந்தவர்கள். அதன்பிறகு தனது சொந்த முயற்சியால், கடுமையான உழைப்பால், நாணயத்தால் படிப் படிப்பாக முன்னுக்கு வந்தார்கள். அவர்களுக்கு எத்தனையோ திறமைகள் இருந்தாலும் கூட அவர்களுடைய வெற்றிக்கு அவர்களுடைய துணைவியார் திருமதி காளியம்மை ஆச்சி அவர்களே காரணம் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

அண்மையில் அண்ணன் திருநாவுக்கரசு அவர்கள் தயாரித்திருந்த ''குமுதம்'' இதழில் 'நான் மிக அழகான, சிவப்பான பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கற்பனையில் இருந்தேன். ஆனால் கட்டாயத்தின் அடிப்படையில் என் கற்பனைக்கு மாறாக எனது திருமணத்தை முடித்து விட்டார்கள்' என ஒரு செய்தினைக் குறிப்பிட்டிருந்தார்கள்.

அதைப் படித்துப பார்த்தவுடன் வானதி பதிப்பகத்திற்குச் சென்று அண்ணன் அவர்களுடன் உரிமையுடன் சண்டை போட்டேன். காரணம் திருமதி காளியம்மை ஆச்சி அவர்கள் எங்கள் நேமம் கோவிலில் பிறந்தவர்கள். அண்ணன் திருநாவுக்கரசு அவர்கள் வழக்கம் போல் சிரித்துக் கொண்டு (அவர்களது சிரிப்பு இடி இடித்தது போன்று இருக்கும்) ''என் துணைவியாரைப் பற்றிப் பல இடங்களில் பெருமையாகச் சொல்லியிருக்கிறேன். உண்மையும் அதுதான்'' என்றார்கள்.

சில பெண்களுடைய ராசி, புகுந்த வீட்டில் வலது காலை எடுத்து வைக்கும் நேரம் அந்த வீட்டில் லட்சுமியும் தனது காலை எடுத்து வைப்பாள். அதேபோல அண்ணன் திருநாவுக்கரசு அவர்களுடைய துணைவியார் புகுந்த வீட்டிற்கு வந்த பிறகுதான் பணமும் புகழும் பெருகியது.

அண்ணன் திருநாவுக்கரசு அவர்களுடைய திறமையில் இன்று எல்லோருக்கும் நம்பிக்கை இருந்தாலும் கூட தொழிலைத் தொடங்கிய நாட்களில் அவர்களுடைய திறமையில் முழு நம்பிக்கைவைத்து தன்னுடைய நகைகளைக்கூட கொடுத்து விற்று வணிகத்தை நடத்துமாறு ஊக்குவித்தவர் திருமதி காளியம்மை ஆச்சி அவர்கள்தான்.

சிவனைப் பற்றிச் சொல்கிற போது சிவன் பாதி; சக்தி பாதி என்பார்கள். அதை நான் மனிதர்களிடத்திலே காண்பது திருநாவுக்கரசு அண்ணன் – காளியம்மை ஆச்சி தம்பதியிடையேதான்.

வானதி திருநாவுக்கரசு அண்ணன் நான்காயிரம் நூல்களை வெளியிட்டுள்ளதில் எனக்

குத் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியும் பெருமையும் உண்டு. காரணம், நான் எழுதிய மூன்று நூல்களையும் அவர்கள் வெளியிட்டு இருக்கிருர்கள். 1977 ஆம் ஆண்டு ''ஸ்ரீ ஐயப்பன் தத்துவங்கள்'' என்கிற நூலை எழுதிக் கொண்டு திருநாவுக்கரசு அவர்களிடம் சென்று அதை நூலாக வெளியிடுமாறு வேண்டினேன். அவர்கள் அதைப் படித்துப் பார்த்துவிட்டு வெளியிடுவதாகத் தெரிவித்தார்கள். நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். வாழ்த்துரை வாங்குவதற்காக நடிகர் திலகம் சிவாஜி அண்ணனிடம் சென்ருேம். அவர் வேடிக்கையாக ''வானதி முன்னுக்கு வருவது உனக்குப் பிடிக்கவில்லையா? நீயெல்லாம் நூல் எழுதினுல் அதை யார் காசு கொடுத்து வாங்கிப் படிப்பார்கள்?'' என்று கூறிவிட்டு ''படித்துப் பார்க்கிறேன்; நன்ருக இருந்தால் வாழ்த்துரை தருகிறேன்'' என்ருர்கள். ஒருவாரம் கழித்து சிவாஜி அண்ணனே வானதியைத் தொலைபேசியில் அழைத்து ''நன்ருக இருக்கிறது; வியாபார ரீதியில் செய்'' என்று சொல்லி வாழ்த்துரையையும் அனுப்பி வைத்தார்கள்.

''ஸ்ரீ ஐயப்பன் தத்துவங்கள்'' நூல் மூன்று பதிப்புகளில் இதுவரை 16,000 பிரதிகள் விற்றிருக்கின்றது. நான் பெற்ற பேறுகளில் சிறந்ததாகக் கருதுவது திருநாவுக்கரசு அண்ணன் அவர்கள் என்னையும் ஒரு நூலாசிரியகை ஆக்கியதைத்தான். வானதி கட்டிய தமிழ்க் கோவிலுக்குத் தேவைப்பட்ட நான்காயிரம் செங்கற்களில் அடியேனுடைய செங்கற்கள் மூன்று சேர்ந்திருப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். அன்புடன் பெற்ற பெருமையைப் பாராட்டி வணங்குகிறேன்.

நல்லதையே எண்ணுங்கள் !

ஒரு வழிப்போக்கன் வெய்யிலில் நடந்து வந்த களைப்புடனும் பசியுடனும் காணப்பட்டான். கற்பக விருட்சம் மரத்தின் கீழே நின்று கொண்டிருந்த அவன் 'உட்கார ஒரு கட்டிலும் பசிக்கு நல்ல – சுவையான உணவும் இப்பொழுது கிடைத்தால் எப்படி இருக்கும்' என எண்ணினான். உடனே அவை கிடைத்தன. அமர்ந்து மன நிறைவோடு உண்டான். 'இந்தக் கட்டிலின் மீது ஒரு மெத்தையும் தலையணையும் இருந்தால் எப்படி இருக்கும்' என எண்ணியவுடனே அவை வந்தன. நன்றாக உறங்கி எழுந்தான்.

எழுந்தவுடன் 'இப்பொழுது ஒரு புலி வந்தால் நாம் என்ன செய்வது?' என எண்ணிக் கொண்டிருந்தபோதே ஒரு புலி வந்தது. வழிப்போக்கனை அடித்துக் கொன்றுவிட்டது.

இந்தக் கதையிலிருந்து என்ன தெரிகிறது? நல்லதையே எண்ணினால் நல்லதே நடக்கும் !

— ஆர் எம். வி. இராமசாமி

அரிமழத்தில் இலவச கண் சிகிச்சை முகாம்

அரிமழம் தே. முருகப்ப செட்டியார் அறக்கட்டளையும் மதுரை அரவிந்த் கண் மருத்துவ மனையும் இணைத்து அரிமழம் ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 19-7-92 அன்று இலவச கண் சிகிச்சை முகாமை நடத்தின.

கண்புரை, கிட்டப் பார்வை, தூரப் பார்வை, மாறுகண், மாலைக்கண் முதலிய அனைத்துக் கண் நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்போது 310 நோயாளிகள் பயன் பெற்றனர். கண் அறுவைச் சிகிச்சைக்காக 26 பேர் தேர்வு செய்யப் பட்டு மதுரைக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். சுமார் 100 பேருக்குக் குறைந்த விலையில் கண் கண்ணாடி வழங்க ஏற்பாடு செய்யப் பெற்றது.

திருமணம்

தேவகோட்டை திரு. அ. வெ. வெங்கடாசலம் செட்டியார் பேரனும் செந்தில்நாதன் செட்டியார் புதல்வனுமாகிய சங்கர் - கமலா திருமணம் 13-7-92 அன்று தேவகோட்டையில் சிறப்பாக நிகழ்ந்தது. அப்போது திரு. அ. வெ. வெங்கடாசலம் செட்டியார் எழுதியுள்ள ''வாழ்க்கையும் வழிபாடும்'' என்ற புத்தகத்தை காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வெளியிட திரு. சாமிநாதன் செட்டியார் பெற்றுக் கொண்டார். திரு செந்தில் நாதன் செட்டியார் வரவேற்று நன்றி கூறினார்.

வெள்ளைப் பணியாரம்

உழக்குப் பச்சரிசி உப்போ தேவைக்கு
உழுந்தே கால்பாகம் ஊறவைத் தாட்டியபின்
கரண்டியொன்று விட்டாக்கால் காய்கின்ற நெய்தனிலே
வருமே பணியாரம் வாய்க்கு ருசியாக !

— பேராசிரியை சுலோசனா சேவுகன் செட்டி



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ கீழக்கோட்டை அருள் மிகு ஸ்ரீ ஆதீனமிளகி ஐயனர் கோவிலின் திருக்குட நன்னீ ராட்டு விழா 5-7-92 அன்று சிறப்பாக நடைபெற்றது. அதன் மண்டலாபிஷேக விழா 19-8-92 புதன்கிழமை நடைபெறும் என அறிவிக்கப் பெற்றுள்ளது.

ஃ பிள்ளையார்பட்டி அருள் மிகு கற்பக விநாயகர் கோவிலில் 22-8-92 முதல் 31-8-92 வரை பத்து தினங்கள் திருவிழா நடை பெற உள்ளது. 30-8-92 ஞாயிறு தேரோட்டம். 31-8-92 திங்கள் விநாயகர் சதுர்த்தி. இந்தப் பத்து தினங்களிலும் கற்பக விநா யகர் இரவு நேரத்தில் பல்வேறு வாகனங்களில் அமர்ந்து திருவீதி பவனி வருவார்.

ஃ காரைக்குடி நகரச் சிவன் கோவிலில் ஆடி மீ 8உ முதல் 19உ வரை 12 நாட்கள் ஆடிப் பூரத் திருவிழா நடைபெறுகிறது. கடைசி நாள் திருக்கல்யாணத் துடன் திருவிழா நிறைவு பெறு கிறது.

ஃ காரைக்குடி சுழற் குழு வின் புதிய அமைப்பில் கோட்டை யூரைச் சேர்ந்த திரு. ஆர்எம். முத்தையா செயலாளராகப் பொறுப்பேற்றுத் தொண்டாற்றி வருகிறார்.

ஃ கொழும்பு நகரத்தார் புதிய கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு 12-7-92 முதல் 16-7-92 வரை ஆடி வேல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஃ புதுக்கோட்டை மாவட் டம் செவலூர் அருள்மிகு மதுக் கார நாச்சியம்மன் திருக்கோவி லின் இரண்டாம் ஆண்டு வருடா பிஷேக விழா 19-7-92 அன்று நடைபெற்றது.

ஃ 1992-93ஆம் ஆண்டுக்கு கிருஷ்ணகிரி சுழற் குழுவின் தலைவ

ராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இராயவரம் திரு. என். நாராயணன் 11-7-92 அன்று கிருஷ்ணகிரி வாசன் திருமண மண்டபத்தில் நடந்த விழாவில் பொறுப்பேற்றுள்ளார்.

ஃ வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்ட கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் சார்பாக வேலூரில் 25-7-92 & 26-7-92 ஆகிய இரு தினங்கள் கண்ணதாசன் விழா கொண்டாடப் பெற்றது.

கண்டரமாணிக்கத்தில் குடநீராட்டு விழாக்கள்

கண்டரமாணிக்கம் அருள்மிகு மாணிக்க நாச்சியம்மன் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 9 7 92 அன்று காலை சிறப்பாக நடைபெற்றது அத்துடன் அழகிய கண்ட விநாயகர், பெரியநாயகி அம்மன், கைலாசநாதர், சுப்பிரமணியசுவாமி, ஆதீன மிளகி அய்யனார், முத்து முனியம்மா கோவில்களின் திருக்குட நன்னீராட்டு விழாக்களும் அதே நாளில் சிறப்பாக நடைபெற்றன.

6-7-92 அன்று அனுக்ஞை' விக்னேஸ்வர பூஜைகளும் ஸ்ரீ கணபதி ஹோமமும் 7-7-92 அன்று லெட்சுமி ஹோமம், தன பூஜை கோ பூஜை முதலியனவும் 8-7-92 அன்று விசேட சாந்தி பூத சுத்தியும் 9-7-92 அன்று மகா அபிஷேகம், ஏகதின லட்ச்சார்ச்சனையும் நிகழ்ந்தன.

பிள்ளையார்பட்டி டாக்டர் கே. பிச்சைக்குருக்கள் மதுரை முத்து பட்டர் ஆகியோர் தலைமையில் சுமார் 100 வேத விற்பன்



மேலைச்சிவபுரி திரு. ஆறு. சுப. ஆறுமுகம் செட்டியார் - திருமதி சேனையர்க்கரசி ஆச்சியின் 59 ஆவது ஆண்டு நிறைவு விழா பிள்ளையார்பட்டியில் 25-6-92 அன்று சிறப்பாக நடைபெற்றது.

னர்கள் இக் குட நீராட்டு விழாக் களில் கலந்து கொண்டனர்.

குட நீராட்டு விழாக்களில் திருப்பனந்தாள் காசிமடம் சுவாமி கள், தவத்திரு குன்றக்குடி அடிக ளார், கோவிலூர் ஆதீனம் தவத் திரு காசிவிஸ்வநாத ஞானதேசிக சுவாமிகள், கலாமடம்-பாதரக்குடி ஆதீனம் தவத்திரு இரவீந்திர சுவாமிகள் துலாவூர் ஆதீனம் தவத்திரு ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் சிவகங்கை ராணி திரு மதி ராஜலட்சுமி ரகுராஜ், மற்றும் நகரத்தார், நாட்டார் பெருமள வில் கலந்து கொண்டனர்.

திருக்குட நன்னீராட்டுக் குழுத் தலைவர் தொழிலதிபர் திரு. லெ. நாராயணன் செட்டியார், செய லாளர் திரு. வெ. கரு சண்முகம் செட்டியார் பொருளாளர் திரு. மு. சிநா. இராமநாதன் செட்டியார் ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடு களைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

திருமணம்

ஆவினிப்பட்டி திரு. ஆ. க. ஆ. ஆ சொக்கலிங்கம் செட்டி யார் புதல்வன் செல்வன் சொக்க லிங்கம் B. Com., க்கும் ஒ. சிறு வயல் திரு. கா. ப. ராம. சே. இராமனுதன் செட்டியார் புதல்வி செல்வி சிட்டாள் என்ற விமலா வுக்கும் 23-3-92 அன்று ஒ. சிறு வயலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

காலம்

காலத்தில் மூன்று பிரிவுகள் உண்டு. அவை : கடந்த காலம்; நிகழ் காலம்; எதிர் காலம் ஆகியவையாகும்.

காலம் அனைத்தையும் அழிக்கும் வல்லமையுடையது. காலச் சக்கரத்தில் சகலமும் அழிந்து போம். மறுபடியும் உற்பத்தியாகும். இது இயற்கையின் நியதி.

ஏழைகளுக்கு நல்ல காலமும் வரும்; பணக்காரர்களுக்குக் கெட்ட காலமும் வரும்.

அனைத்தையும் மாறுதலடையச் செய்வது காலத்தின் சுபாவம். ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு பொருளும் மாறிக் கொண்டே யிருக்கும்.

ஒரு காலத்தில் உலகத்தில் நல்ல காரியங்கள் அதிகமாக நடக்கும். பின்னொரு காலத்தில் கெட்ட காரியங்கள் அதிகமாக நடக்கும். இந்த நடப்பு எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருக்கும்.

போனகாலம் திரும்பி வராதாகையால், காலத்தை ஒரு வினாடியும் வீணாக்கக் கூடாது.

நமது நிகழ்காலம், இறந்த காலத்தின் விளைவு, எதிர்காலத்தின் வித்து என்பதை அறிந்து செயலாற்ற வேண்டும்.

காலம் கருத்தை மாற்றும்; கருத்து காலத்தை மாற்றும்.

காலம் எவனையும் தடியால் அடித்துக்கொல்வதில்லை. அவனுடைய வாழ்க்கையை, அறிவை, ஆராய்ச்சியை, வலிமையை, ஒழுக்கத்தை அழித்து பின் மாயச் செய்யும்.

ஒருவன் எங்கேயிருந்தாலும், எவ்வளவு படித்திருந்தாலும், காலத்தைப் பயன்படுத்தாவிட்டால் அவன் வாழ்க்கையில் வெற்றியடைய முடியாது.

காலத்தைப் பயன்படுத்தினாலும் பயன்படுத்தாவிட்டாலும் ஒவ்வொரு வினாடியும் போய்கொண்டேயிருக்கும்.

காலத்தைப் பயன்படுத்தத் தெரிந்தவன் மூடனானாலும் அவனுக்குப் பயன் கிட்டும். காலத்தைப் பயன்படுத்தத் தெரியாதவனுக்கு அவன் அறிவாளியானாலும் பயன் கிடைக்காது.

காலமாறுதலைக் கண்டறிந்து நடக்கவேண்டும். ஒரு காலத்தில் இலாபம் ஏற்படக்கூடிய தொழிலை வேறொரு காலத்தில் செய்தால் அது நஷ்டத்தைத் தரும்.

சூரியன், சந்திரன், நட்சத்திரம் முதலிய யாவும் காலத்தில் அடங்கி நடக்கின்றன.

பணமும், வலிவும், ஊக்கமும் ஒன்று சேரப் பெற்றவனாயினும் காலத்தை அறிந்து செயலாற்றுபவனே அறிவுள்ளவனாவான்.

வாழ்க்கையில் முன்னேற்றமடைந்தவர்களைப் பார்த்தால் அவர்கள் நேரத்தைச் செலவழிப்பதில் சிக்கனக்காரர்களா யிருப்பதைக் காணலாம்.

கடவுளும், ஞானியும்தான் காலத்தால் கட்டுப்படாதவர்கள். மற்ற சகல ஜீவர்கள் முதல் தேவர்கள் வரை காலத்திற்குக் கட்டுப்பட்டவர்களே.

(திரு. C. U நஞ்சப்பா இயற்றிய ''உலக அநுவங்கள்'' என்ற நூலிலிருந்து)

முன்னாள் நீதிபதி பழநியப்பனுக்குப் புதிய பொறுப்பு

நீதிபதி திரு. என். பழநியப்பன் நீதித்துறையில் பழுத்த அனுபவமிக்கவர்.

இவர் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் கல்லலில் 1932 ஆம் ஆண்டு பிறந்தவர். இவருடைய தந்தையார் திரு.



நாச்சியப்ப செட்டியார். தாயார் திருமதி கருப்பாயி ஆச்சி ஆவார்.

திரு. பழநியப்பன் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியிலும் சட்டக் கல்லூரியிலும் பயின்று B.A. B.L. பட்டம் பெற்று சிவகங்கையிலும் சென்னையிலும் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

இவர் 1974 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிபதியாகப் பணியாற்றியுள்ளார். விற்பனை வரி மேல் முறையீட்டுக் குழுத் தலைவராகவும் இவர் நான்கு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். தொழிலாளர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றியுள்ள திரு. பழநியப்பன் 1990 ஆம் ஆண்டு பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

சிதம்பரம் காவல் நிலையத்தில் போலீசாரால் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்படும் நிகழ்ச்சி தொடர்பாக விசாரணை நடத்த திரு என். பழநியப்பன் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷனை அரசு அமைத்துள்ளது.

பழுத்த நீதித் துறை அனுபவமும் நேர்மைத் திறனும் கொண்ட திரு. பழனியப்பனுக்கு ஒரு விசாரணைக் கமிஷனுக்குத் தலைமை ஏற்கும் பொறுப்புக் கிடைத்திருப்பது அவருடைய அனுபவத்திற்கும் நேர்மைத் திறத்திற்கும் கிடைத்திருக்கும் பரிசாகும்.

ஆசிரியருக்குக் கடிதம்

அன்புடையீர், வணக்கம்.

ஜூலை '92 "நகரத்தார் குரல்" லில் "நகரத்தார் சுய நிதிப் பல்கலைக் கழகம்" என்ற தலைப்பில் துணைவேந்தர் திரு கே. நாகப்பன் அவர்கள் எழுதிய கட்டுரை நம் அனைவரையும் சிந்திக்க வைத்திருக்கின்றது. ஒளிவு மறைவின்றி உண்மை நிலையை எடுத்துக் கூறிய தோடல்லாமல் நாம் உறுதியோடு முயற்சி எடுத்துச் செயல்பட்டால் இக்காரியத்தை

எளிதில் நிறைவேற்ற முடியும் என்பதை மிகத் தெள்ளத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்கள். எல்லோருக்கும் புரியும்படி இக் கட்டுரை எழுதிய துணைவேந்தர் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். நோக்கத்தின் மேன்மையை உணர்ந்து நகரத்தார் ஒவ்வொருவரும் இதைத் தங்கள் கடமை என நினைத்துச் செயலாற்றினால் எதிர்காலச் சந்ததியினரைச் சூழும் அறியாமை இருளை அகற்றலாம். நாம் எல்லோரும் உயர்வு தாழ்வின்றி ஒரு முகமாக இணைந்து செயலாற்றினால் இமயத்தைக் கூட எளிதில் வெல்லலாம். அனைவரும் சிந்தித்து செயலில் இறங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சொ. அருணாசலம்
கீழப்பூங்குடி

அன்புடையீர், வணக்கம்.

சென்ற இதழில் வெளிவந்த, டாக்டர் நாகப்பன் அவர்கள் எழுதிய ''நகரத்தார் சுயநிதிப் பல்கலைக் கழகம்'' பற்றிய கட்டுரையைப் படித்த பலருள் நானும் ஒருவன்.

டாக்டர் நாகப்பர் அவர்கள் கூறி இருப்பதுபோல், நம் இனத்துப் பெருநிதி படைத்தவர்களும், நகரத்தார் சங்கங்களும், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் பணிபுரியும் சான்றோர்களும் ஒன்று கூடி விவாதித்து, இதற்கு இப்போதே வித்திட்டால் அவர்கள் கூறுவது போல் 21 ஆம் நூற்றாண்டிலாவது இந்தப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த முடியும்.

காசி, நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம், மலேசியா, சிங்கப்பூர் போன்ற கோவில் நிதிகளிலிருந்தும், அங்குள்ள பெருமக்களிடமும், தமிழக நகரத்தார் சங்கங்களிடமும் நிதி தரும்படி கேட்கலாம். உண்டியல்களும் ஏற்படுத்தலாம்.

சுப. முத்தையா
திண்டுக்கல்

அன்புடையீர், வணக்கம்.

டாக்டர் நாகப்பன் அவர்களின் சுயநிதிப் பல்கலைக் கழக யோசனையை நம் குரலில் படித்தேன்; பரவசம் கொண்டேன்.

அது அருமையான திட்டம். ஆழமான சிந்தனை! அது வேர் ஊன்றி நிற்க வேண்டும். எனவே அரசு போன்று முயற்சியுள்ளோர் முழு நேரப் பணிகளில் இறங்க வேண்டும்.

கலந்துரையாட நிச்சயம் களம் அமைக்க வேண்டும். செயல் வீரர் நம் அண்ணன் வி. என். சிடி. அவர்களால் முடியாத காரியமில்லை கம்ப்யூட்டர் நாகப்பன் அவர்களும் வி. என். சிடி அவர்களும் மற்றும் ஆர்வமிக்க நகரத்தார்களும் இணைந்து அத்திட்டம் நிறைவேற வெற்றிபெற உதவிட வேண்டுகிறேன்.

இராம. அண்ணாமலை
நாகமலை புதுக்கோட்டை

ஃ பாகனேரி செல்வ விநாயகர் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா ஆவணி மீ 26உ (11-9-92) அன்று நடைபெற உள்ளது.

உ
சிவமயம்

நினைவஞ்சலி





தோற்றம் ;	தோற்றம் :
23—8—27	
மறைவு :	மறைவு :
3—8—86	7—8—90
சொக்கநாதபுரம்	சொக்கநாதபுரம்
சி. அழ. சொ.	**சி. அழ. சொ. கா.**
காசிச் செட்டியார்	**தெய்வானை ஆச்சி**

அன்பின் பிறப்பிடமாய் அறிவின் உறைவிடமாய்
பண்பின் அகமாய் பாசத்தின நேசமாய்
உழைப்பே உயர்வாய் உண்மையே உருவாய்
ஒன்றே சொல்லாய் அதுவே செயலாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுரையும்
தெய்வத்துள் வீற்றிருக்கும் தங்கள் பொற்பாதங்களில்
எங்கள் கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்

எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

இங்ஙனம் :

கா. சோமசுந்தரம் B Com , M. A. (மகன்)
சோம. விசாலாட்சி (மருமகள்)
வை. மீனாள் (மகள்)
கா. வைத்தியநாதன் B. A. (மருமகன்)

"ஸ்ரீ காசி இல்லம்" 10, திருமலை சந்து
கோரிப்பாளையம், மதுரை-625 002.

திருமணம்

சண்முகநாதபுரம் திரு. பெ. சித. லெ. இராமசாமிச் செட்டியார் புதல்வன் செல்வன் சிதம்பரம் B. Com., க்கும் காரைக்குடி திரு. ராம. வீர. ராம. பெரி. பஞ்சநதம் செட்டியார் புதல்வி செல்வி மீனாட்சி B. Com, க்கும் 4-6-92 அன்று காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருப்பூரில் 14-6-92 அன்று வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. திருமணத்திலும் வரவேற்பு நிகழ்ச்சியிலும் தொழிலதிபர்கள், வணிகர்கள், நண்பர்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஃ ஃ ஃ

மதுரை தல்லாகுளம் ஸ்டேட் பாங்க் கிளையில் பணிபுரியும் மதகுபட்டி திரு. ராம. கண பழ. கா. சிங்காரம் செட்டியார் புதல்வி செல்வி ராஜேஸ்வரி B Com., க்கும் பாகனேரி திரு. கா. அண. கா. அண்ணாமலை செட்டியார் புதல்வன் செல்வன் காளைராஜா B. A., க்கும் 18-6-92 அன்று மதகுபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தில் தொழிலதிபர்கள். வங்கி அதிகாரிகள், நண்பர்கள் பெருமளவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

தேவகோட்டை - வைத்தீஸ்வரன் கோவில் பாதயாத்திரை

தேவகோட்டையிலிருந்து வைத்தீஸ்வரன் கோவிலுக்கு ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசாமிக்கு உரிய காவடி தாங்கிய பாதயாத்திரை 22-6-92 காலை தொடங்கியது. காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் ஆசி கூறி வழி அனுப்பினர். காசிஸ்ரீ திரு. ஆர். வயிரவன் தலைமையில் 35 பேர் கொண்ட குழுவினர் இனிதே பாதயாத்திரை செய்தனர். தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம் நகரத்தார் சங்கத்தினர் சிறப்பான வரவேற்பளித்தனர். 29-6-92 காலை வைத்தீஸ்வரன் கோவில் சென்று ஸ்ரீ செல்வ முத்துக் குமாரசாமிக்குக் காவடி செலுத்தி அபிஷேக ஆராதனை செய்து வழிபட்டனர்.


சென்னையில் நகரத்தார் மகேஸ்வர பூஜை

நகரத்தார் மகேஸ்வர பூஜை பரிபாலன சபையின் 19 ஆம் ஆண்டு மகேஸ்வர பூஜை 16-8-92 ஞாயிறன்று சென்னை அம்பத்தூர் டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை கோவில் மண்டபத்தில் திரு சாமியாடிச் செட்டியார் என அழைக்கப் பெறும் கண்டனூர் திரு. பழ பழநியப்ப செட்டியார் முன்னிலையில் நடைபெற உள்ளது.

16-8-92 ஞாயிறு அதிகாலை 3 00 மணிக்கு விநாயகப் பானை வைத்தல். 6-00 மணிக்கு விநாயகபுரம் தேன் பழனி ஆண்டவர் ஆலயத்திலிருந்து வேல்அழைத்து வருதல். 7-00 மணிக்குப் பிள்ளைப் பானை வைத்தல். 10-00 மணிக்கு வேல்அபிஷேகம். 11-00 மணிக்கு தீபாராதனை. பகல் 12-00 மணிக்கு அன்னதானம் பாலித்தல். மாலை 2 00 மணிக்கு ஏலம். 6-00 மணிக்கு பானக பூஜை. 6-30 மணிக்கு வேல் திரும்ப எடுத்துச் செல்லுதல்.

புதுமையான ஓவியக் கலைஞர்

ஆயகலைகள் அறுபத்துநான்கு. அவற்றில் ஓவியக் கலையும் ஒன்று. ஒட்டும் முறையில் புது மாதிரி யான ஓவியக் கலையினை மேற் கொண்டு பலரும் பாராட்டும் வகையில் தெய்வப் படங்களை, மற்றும் இயற்கைக் காட்சிகளை வண்ண வண்ணமாக அமைத்து வருகின்றார், கண்டனூரைச் சேர்ந்த திரு. சொ. பழநிமலை.



திரு சொ. பழநிமலை

இராமேஸ்வரத்தில் 50ஆண்டு களுக்கும் மேலாக சதாவிர்த்தி அறநிலையை நடத்தி வரும் கண்டனூர் சி. ராம. சொ.குடும் பத்தில் பிறந்தவர் இவர். மத்திய அரசுப்பணியில் இருக்கும் திரு. சொக்கு சுப்பிரமணியத்தின் சகோதரர்.

கோவில்களில் திருவீதிஉலா வரும் சுவாமி அலங்காரம்செய்வ தில் திறமை உள்ளவர் இவர். ஒட்டும் முறையில் படம் தயாரிப் பதிலும், அலங்காரம் செய்வதி லும் சிறந்து விளங்குகிறார். இத் துறையில் உள்ள ஆர்வமே இவருக்கு குரு.

இரவிவர்மா வரைந்தஓவியத் தின் ஆப்செட் படங்களின் மேல் மஸ்லீன்துணிகளை சுருக்கத்துடன் தைத்து அதன் மீது ஜமிக்கி, ஜரிகை, ஜிகினா வேலைகள் செய் துள்ள படங்களை நம்மவர் வீடு களில் காணலாம். திரு.பழநிமலை படங்களை அவுட்லைனாக வரைந்து பாகங்களை தனித்தனியாக வெட்டி கார்டு கனமுள்ள அட்டையில் ஒட் டியும் வடிவத்திற்கு ஏற்ற கலர்த் துணிகளை தகுந்த அளவு வெட்டி யும் வைத்துக் கொள்கின்றார். துணிகளின் மீது ஏற்கனவே அட் டையில் ஒட்டிவைத்துள்ள பாகங் களை வரிசைப்படி ஒட்டி அதன் பிறகு ஜரிகை, ஜமிக்கி வேலைப் பாட்டினைச் செய்கின்றார். கண்,



ஒட்டும் முறையில்
தயாரிக்கப்பெற்ற முருகன் படம்

மூக்கு, விரல்ரேகை அமைப்புக் களை பெயிண்ட், பிரஷ் கொண்டு செய்யாமல் கறுப்பு நூலினால் ஒட்டி படத்தைச் சிறப்பாகச்

செய்து முடிக்கின்ருர்.

இவர் விநாயகர், முருகன், மகாலெட்சுமி, ஆலிலைக் கண்ணன் ராஜராஜேஸ்வரி போன்ற தெய்வப்படங்களையும் வேளாங்கண்ணி மாதா, மக்கா - மதீனு போன்ற எல்லாப் படங்களையும் செய்து வருகின்ருர்.

இவருடைய திறமையைப் பாராட்டி கண்டனூர் திருக்குட நன்னீராட்டு விழாவில் திரு. ப. சிதம்பரம், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் முன்னிலையில் பொன்னுடை அணிவித்துக் கௌரவித்தார்.

திரு. பழநிமலை நடிப்பாற்றல் மிக்கவர் காவிரிப்பூம் பட்டினம் பட்டினத்தார் திருவிழாவில் பேரனுக, மருத்துவ உதவியாளராக பல ஆண்டுகளாக நடித்து வருகின்ருர்.

சந்திப்பு: பலவான்குடி
குமம. வள்ளியப்பன்

நேமம் கோவிலுக்கு புதிய நிர்வாகக் குழு

நகரக் கோவில்களில் ஒன்ருன நேமம் ஸ்ரீ சௌந்தர நாயகி அம்பாள் சமேத ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் திருக்கோவில் நகர விடுதியில் 9-6-92 அன்று பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அப்போது தேவகோட்டை திரு. சேவு. அண. அண்ணுமலை செட்டியார் அவர்கள் தலைவராகவும் மேலைச்சிவபுரி திரு. ராம. மு. தியாகராஜன் செட்டியார் துணைத் தலைவராகவும் அரிமழம் திரு செ. லெ முத்து செல்லப்ப செட்டியார் செயலாளராகவும் செம்பனூர் திரு குமம. நா. சுப. நா. இராமசாமிச் செட்டியார் பொருளாளராகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

புதிய இக்குழுவினர் பள்ளத்தூர் திரு. அ. ராம. தே. அழ. தேனப்ப செட்டியார் அவர்கள் தலைமையிலான குழுவினரிடமிருந்து பொறுப்புக்களைப் பெற்று ஓராண்டுக்கு நிர்வாகம் செய்வார்கள்.

சிந்தனை செய் மனமே . . .

ஃ ஒரு அங்குல தங்கத்தைக் கொண்டு ஒரு அங்குல நேரத்தை விலைக்கு வாங்க முடியாது.

ஃ புத்தகங்கள் இல்லாத வீடு 'ஆத்மா' இல்லாத உடலைப் போன்றது.

ஃ திட்டம் போடாமல் உழைப்பவர்களுக்கு எதிர்காலம் என்பதே கிடையாது.

ஃ ஆரோக்கியம்தான் பெரிய செல்வம். அதற்கு வரி எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.

ஃ ஐம்பது மனிதர்கள் செய்யும் வேலையை ஒரு இயந்திரத்தினுல் சுலமாகச் செய்ய முடியும். ஆனுல் அறிஞன் ஒருவன் செய்யும் வேலையை எந்த இயந்திரத்தினுலும் செய்யமுடியாது.

– வி. ஆர். சின்ன அருணாசலம்,
தேவகோட்டை

நாசிக் - பஞ்சவடியில் திருக்குட நன்னீராட்டு விழா

நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்குச் சொந்தமான நாசிக் - பஞ்சவடி அருள்மிகு கார்த்திக் சுவாமி என்கிற தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா பம்பாய் வாழ் நகரத்தார்களின் ஒத்துழைப்போடு நாளது ஆவணித் திங்கள் 24 ஆம் நாள் (9-9-92) புதன் கிழமை காலை 6-15 மணிக்குமேல் 7-15 மணிக்குள் நடைபெற விருக்கிறது.

6-9-92 ஞாயிறு காலை 7-30 மணி முதல் 8-30 மணி வரை அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை தனபூஜை.

7-9-92 திங்கள்காலை 9 மணி அளவில் வாஸ்து சாந்தி, மாலை கடஸ்தாபனம், யாகசாலை பூஜைத் தொடக்கம்.

8-9-92 செவ்வாய் காலை 8-30 மணி முதல் 11-00 மணிக்குள் இரண்டாம் கால யாகபூஜை. மாலை 5-00 மணி முதல் 7-30 மணிக்குள் மூன்றும் கால யாக பூஜை.

9-9-92 புதன் காலை 5-00 மணிமுதல் நான்காம் கால யாக தொடக்கம். காலை 10 மணிக்கு மகா அபிஷேகம். மாலை 5-00 மணி அளவில் சுவாமி புறப்பாடு.

சென்னையில் கம்பன் விழா

சென்னை கம்பன் கழகத்தாரின் பதினெட்டாம் ஆண்டு கம்பன் விழா 7, 8 & 9-8-92 ஆகிய மூன்று தினங்கள் சென்னை ஏவி எம். இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

7-8-92 வெள்ளி மாலை 5-30 மணிக்கு திரு. குமரி ஆனந்தன் தலைமையில் விழா தொடங்குகிறது. நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயில் வரவேற்றுப் பேச திரு. ஜி. கே. சுந்தரம் தொடக்கவுரை நிகழ்த்துகிறார். தமிழ்த் தொண்டாற்றிய தேரழுந்தூர் திரு. சீனிவாசாச்சாரியார், திரு. அடிகளாசிரியருக்குப் பாராட்டு. நினைவுப் பரிசில்கள் வழங்கல், நூல்கள் வெளியீடு.

8-8-92 சனி காலை 9-30 மணிக்கு திரு. சிற்பி பாலசுப்பிரமணியன் தலைமையில் 'கம்பனில் ... ஒரு சோறு' என்ற பொதுத் தலைப்பில் கவியரங்கம். எட்டுக் கவிஞர்கள் பங்கேற்கிறார்கள். மாலை 5-00 மணிக்கு திரு. சி. பாலசுப்பிரமணியன் தலைமையில் 'என்றும் முழங்கும் இராம காதை' என்ற பொதுத் தலைப்பில் சோலைக் காட்சி.

9-8-92 ஞாயிறு காலை 9-30 மணிக்கு திரு சோ. சத்யசீலன் தலைமையில் 'சிறிதே இடம் பெற்றோரில் பெரிதும் சிறந்து நிற்பவர் யார்?' என்ற தலைப்பில் விவாத மேடை. மாலை 5-00 மணிக்கு நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயில் நடுவர் பொறுப்பேற்க 'கம்பனின் காவியத்தில் மிகுதியும் இழையோடுவது... ஒழுக்கத்தின் விழுப்பமே... விதி வலியே... இறை உணர்வே...' என்ற தலைப்பில் பட்டி மண்டபம். மூன்று அணிகளில் ஒன்பது பேர் வாதிடுகிறார்கள்.

பாகனேரி சேந்தூரணி செல்வ விநாயகர் கோவில் குடநீராட்டு விழா

பாகனேரி பழைய வளவில் அமைந்துள்ள சேந்தூரணி அருள்மிகு செல்வவிநாயகர் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா நாளது -ஆவணி மீ 26 உ (11-9-92) வெள்ளிக் கிழமை காலை 8-25 மணிக்குள் 9-50 மணிக்குள். நடைபெற உள்ளது.

குட நீராட்டுக்கு முதல்நாள் பட்டிமன்றம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. ஆவணி மீ 24உ (9-9-92) யாகசாலைப் பூஜை தொடங்கி 26உ வரை நடைபெற உள்ளது.

பாகனேரி திரு. சுப. வே. மாணிக்கம் செட்டியார் அவர்கள் தமது சொந்தச் செலவில் திருக்கோவிலுக்கு முன்பக்கம் மண்டபம் எழுப்பியும் புரிதாகக் கோபுரம் அமைத்தும் மதில்சுவர் அமைத்தும் மற்றும் திருப்பணி வேலைகளைத் துரிதமாகச் செய்து வருகிறார்கள்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை-625 009ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.

நகரத்தார் குரல்

சந்தா விவரம்

ஓர் ஆண்டு (அஞ்சல் கட்டணம் உட்பட)	ரூ.	30—00
டெபாசிட் சந்தா (,,)	ரூ.	300—00
வெளிநாடு (ஓர் ஆண்டுக்கு வான ஊர்தி அஞ்சல் கட்டணம் உள்பட)	ரூ.	200—00

ஃ சந்தாத் தொகையை மணியார்டர் மூலமும் பாங்க் டிராப்ட் மூலமும் அனுப்பலாம்.

ஃ பணம் அனுப்பும்போது சந்தா உறுப்பினர் எண் அல்லது எந்த மாதம் முதல் இதழ் வேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

ஃ பாங்க் செக், டிராப்ட் ஆகியவை ''நகரத்தார் குரல்'' என்ற பெயரில் இருத்தல் வேண்டும்.

விளம்பர விவரம்

அட்டை (வெளிப் பக்கம்)	ரூ.	500—00
அட்டை (உள் பக்கம்)	ரூ	300—00
முழுப் பக்கம்	ரூ.	200—00
அரைப் பக்கம்	ரூ.	100—00
கால் பக்கம்	ரூ.	50—00

தொடர்ந்து 12 மாதங்களுக்கு மேல் வெளியிடப் பெறும் விளம்பரங்களுக்குக் கட்டணத்தில் சலுகை உண்டு.

மணமகன் தேவை, மணமகள் தேவை, சுவீகாரம் போன்ற விளம்பரங்கள் முக்கால் கட்டணத்தில் வெளியிடப் பெறும்.

மணி விழா, திருமணம் போன்ற செய்திகளை ஒளிப் படத்துடன் வெளியிடக் கட்டணம் (அரைப் பக்கம் அளவு) ரூ. 100-00

— நிர்வாகி